செ.வெ.எண்.02 நாள்: 03.05.2021

**தூத்துக்குடி மாவட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்களின் ஊடக அறிவிக்கை (Media Bulletin)**

---

தூத்துக்குடி மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் சட்டமன்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் ரூ.3 கோடியே 35 லட்சம் மதிப்பில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கு தரைத்தளம் 5200 சதுர அடியிலும், முதல் தளம் 5090 சதுர அடியிலும் மொத்தம் 10180 சதுர அடி பரப்பில் லிப்ட் மற்றும் லாக்கர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. புதிய கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.05.2021) திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தலின்போது 6 சட்டமன்ற தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட 2100 கண்ட்ரோல் யூனிட், 3549 பேலட் யூனிட், 2121 விவிபேட் ஆகியவைகள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கென தனியாக ஒதுக்கப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டு சீல் செய்யப்பட்டது. மேலும் இந்த அறைகள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள இரும்பு கதவு (லாக்கர்) மூலம் மூடப்பட்டது. வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் சீல் செய்யப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது சார் ஆட்சியர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான், இஸ்ரோ நில எடுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.செல்வராஜ், கோவில்பட்டி கோட்டாட்சியர் திரு.சங்கரநாராயணன், உதவி ஆட்சியர் (கலால்) திரு.செல்வநாயகம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.பரிமளா, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.வெள்ளைச்சாமிராஜ், உதவி பொறியாளர் திரு.பாலா, தேர்தல் வட்டாட்சியர் திரு.ரகு, தூத்துக்குடி வட்டாட்சியர் திரு.ஜஸ்டின், ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் திரு.மணிகண்டன், அரசியல் கட்சி பிரமுகர்கள் திரு.ரவி (தி.மு.க.), திரு.சந்தானம் (அ.இ.அ.தி.மு.க.) மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.**